# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No.209/2024**

Deposition of Witness of PW8

| | | | |
|---|---|---|---|
| Name | : தீபா | Calling | : |
| Father/Husband's Name | : | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 10th பிப்ரவரி 2026.

எதிரி ஆஜரில் இல்லை.
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் தற்பொழுது தர்மபுரி மாவட்டம் மாரண்டஅள்ளி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் கடந்த 26.01.2022 ஆம் தேதி மொடக்குறிச்சி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது மொடக்குறிச்சி காவல் நிலைய குற்ற எண் 30/2022 சட்ட பிரிவுகள் 279, 337 @ 279, 304(A) இதச ன் கீழான சட்டபிரிவினை மாற்றம் செய்து புலன் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்த வழக்கு கோப்பினை பெற்றுக்கொண்டு 27.01.2022 ம் தேதி சம்பவ இடம் காலை 8.00 மணிக்கு சென்று சென்று சம்பவ இடத்தை சாட்சி பூபதி என்பவர் அடையாளம் காட்ட சாட்சிகள் பழனிசாமி, செந்தில்குமார் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகஜரில் சம்பவ இட சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. பின்பு காலை 9.30 மணிக்கு ஈரோடு அரசு தலைமை மருத்துவமனை சென்று 9.30 முதல் 12.00 மணி வரை பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சிகளுக்கு சம்மன் சார்வு செய்து சாட்சிகள் பூபதி, வினோத்குமார், லட்சுமி, சுகுணா, பூங்கொடி, செல்வராஜ், மணி பழனிசாமி செந்தில்குமார் ஆகிய சாட்சிகளை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தும், பிரேத விசாரணை செய்ய வேண்டுகோய் கடிதம் தயார் செய்தும், பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக தலைமை காவலர் 666 கதிர்வேல் என்வர் மூலம் அனுப்பி வைத்தும், 10.02.2022ம் தேதி வழக்கின் எதிரி சின்னுசாமி என்பவரை காலை

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.02.10 20:23:17 +0530

10.30 மணிக்கு காவல்நிலையத்தில் வைத்து கைது செய்து எதிரி சின்னுசாமி என்பவரை தக்க பிணையில் விடுவித்தேன். எதிரி ஓட்டி வந்த வாகனமான TN 22 CE 5338 என்ற டாடா இண்டிகா விஸ்டா என்ற காரை மோட்டார் வாகன ஆய்வாளருக்கு ஆய்வுக்காக அனுப்பி வைத்தேன். பின்பு 14.02.2022 ல் அன்று வழக்கில் சம்பந்தப்பட்ட வாகனத்தின் ஆய்வறிக்கை பெற்றும், ஆய்வறிக்கை வழங்கிய சாட்சி சிவக்குமார் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **வாகன தணிக்கை அறிக்கை அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

3. அன்றைய தினமே இறந்துபோன தியாகராஜன் என்பவருக்கு பிரேத பரிசோதனை மேற்கொண்ட மருத்துவர் சரண்யா என்பவரை விசாரித்து பிரேத பரிசோதனை சான்று பெற்றும், வாக்குமூலம் பதிவு செய்தேன். **இறப்பு இன்டிமேசன் அ.சா.ஆ.7 ஆகவும், விபத்து பதிவேட்டு நகல் அ.சா.ஆ.8 ஆகவும், பிரேத பரிசோதனை சான்று அ.சா.ஆ.9 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு அன்றைய தினமே எனது புலன்விசாரணை முடித்தும் எதிரி சின்னசாமி மீது சட்டபிரிவு 279, 304(A) இதச ன்படி அன்றைய தேதியில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிதரப்பு வழக்கறிஞர் முன்னிலையாகியும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை சாட்சியம் முடித்து வைக்கப்பட்டது.**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.02.10 20:23:22 +0530